# பண்பாடுகள் மேம்படுத்தும் நிகழ்ச்சிகள்

## இனம் - 21

01. நமது பண்டைய மரபுரிமையைப் பேணிக் காப்பதற்கும், வெளிப்படுத்துவதற்கும் கலைகள் கைத்திறத் தொழில்கள் மற்றும் பண்பாட்டை ஊக்குவிப்பதற்கும் 1984 ஆம் ஆண்டில் தமிழ் வளர்ச்சி – பண்பாட்டுத்துறை தோற்றுவிக்கப்பட்டது. பல தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் ஒரு சில தனியார் நிறுவனங்கள் தவிர தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு மற்றும் ஜவகர் பாலர் இல்லம் போன்ற அரசுச் சார்பு நிறுவனங்கள், பல துறைகளில் கலை மற்றும் பண்பாட்டைப் பேணும் பணிக்குத் தங்களின் பங்கை அளிக்கின்றன. தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும், பண்பாட்டை மேம்படுத்தி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், அரிய கலை வடிவங்களைப் பாதுகாக்கவும், கலைத் திறமை மிக்கவர்களை ஊக்குவிக்கவும் மாவட்டக் கலை மன்றங்கள் நிறுவப் பெற்றுள்ளன. இம்மன்றங்கள் பள்ளி நிலையில் தொடங்கி தொழில் முறை சாரா மற்றும் தொழில் முறைக் கலைஞர்கள் மூலம் கலை – பண்பாட்டு முன்னேற்றத்திற்கும் கலை மேம்பாடு தொடர்பிலான நடவடிக்கைகளுக்கும் இணைப்பு அமைப்பாகச் செயல் படுகின்றன. மேலும், இயல், இசை, நாடக மன்றம், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக்குழு மற்றும் ஜவகர் பாலர் இல்லம் ஆகியவற்றின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் ஒரு மையமாக மாவட்டத்தில் இம்மாவட்டக் கலை மன்றங்கள் செயல்படுகின்றன. இம்மன்றத்திற்கு மாவட்டாட்சியர் தலைவராகவும், தமிழ் வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் உறுப்பினர் செயலராகவும் உள்ளனர்.

### தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம்

02. தமிழ்நாடு இயல், இசை நாடக மன்றத்தின் முக்கிய நோக்கங்களாவன.

இந்திய மாநிலங்களுக்கிடையே கலைக் குழுக்களைப் பரிமாற்றம் செய்தல், நலிந்த கலைஞர்களுக்குத் திங்கள் தோறும் நிதியுதவி ஒப்பளிப்புச் செய்தல், மறைந்த புகழ் மிக்க கலைஞர்களின் குடும்பங்களுக்குக் குடும்ப பராமரிப்பு நிதியுதவி ஒப்பளிப்பு செய்தல், தமிழ் நாட்டின் பல்வேறு கலை நிறுவனங்களின் வாயிலாகச் செயல்திறமிக்க புத்திளம் கலைஞர்களின் நிகழ்ச்சிகளுக்கு வாய்ப்பளிக்கும் வகை செய்து ஊக்குவித்தல், பல்வேறு வகைகளில் கலைத்துறையில் ஆற்றிய அரிய பணிகளுக்காகக் கலைஞர்களுக்கு "கலைமாமணி" என்ற மாநில விருது வழங்கல், தமிழ் இலக்கிய காட்சிகளைத் தீட்டிக் காட்டும் தமிழ் நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றுவதற்காகத் தொழில் முறையிலான நாடகக் குழுக்களுக்கும் மானியம் வழங்கல், தமிழில் கலை மற்றும் பண்பாடு குறித்த அரிய நூல்களை வெளியிடுவதற்கு மானியம் ஒப்பளிப்புச் செய்தல், தமிழ் கலைத் துறையிலுள்ள மேதைகளை நினைவு கூர்வதற்காக விழா எடுக்கும் தன்னார்வக் கலை நிறுவனங்களுக்கு மானியங்களை அளித்தல், பழங்கலைகளின் அரிய கலை வடிவங்களை அழிவதிலிருந்து படியெடுத்துக் காத்தல், ஏற்பளிக்கப்பெற்ற கலைஞர்கள் வாயிலாக இசையின் அரிய தன்மைகளை ஒலிப்பதிவு செய்தல், தமிழ்நாட்டின் திரைப்படத் தொலைக்காட்சி நிறுவனங்களிலும் சென்னை மற்றும் மதுரையிலுள்ள அரசு இசைப் பயிற்சி மையங்களிலும் பயிலும் வறுமை நிலையிலுள்ள மாணவர்களுக்குப் படிப்புதவிக் தொகை அளித்தல் ஆகியனவாகும்.

1994–95 மற்றும் 1995–96 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்திற்கு முறையே ரூ. 68.27 இலட்சங்களும் ரூ. 37.93 இலட்சங்களும் செலவாகியுள்ளது.

### தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைக்குழு

03. போட்டி விளையாட்டுகளில் பொருத்தமான அமைப்பொன்றை உருவாக்குவதன் மூலம் இளைஞர்களின் ஆர்வத்திற்கு உறுதுணையாக இருக்கவும், அவர்களின் பேரார்வத்தை நிறைவேற்றுவதற்குப் பணி புரியவும் விளையாட்டு மற்றும் இளைஞர் பணி இயக்கத்தையும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுக் கழகத்தையும் இணைத்து 1992 ஆம் ஆண்டில் (18.7.92) தமிழ்நாட்டு விளையாட்டு மேம்பாட்டு ஆணைக்குழு

தோற்றுவிக்கப்பட்டது. தேசியப் பணித் திட்டங்கள், இளைஞர் விடுதிகள், நேரு யுவ கேந்திரங்கள், இளைஞர்களுக்கான நடவடிக்கைகள் முதலியன போன்ற மைய அரசால் தொடங்கப்பட்ட திட்டங்களும் இவ்வாணைக் குழுவால் செயல்படுத்தப்படுகின்றன.

**ஆணைக்குழு நிறுவப்பட்டதற்கான நோக்கங்கள் வருமாறு :**

i) போட்டி விளையாட்டுக்களுக்கான நடவடிக்கைகளையும் போட்டி முகாம்களையும் நடத்தத் திட்டமிடுதல், மேம்படுத்துதல் மற்றும் தரப்படுத்துதல்.

ii) விளையாட்டு அரங்கம், விளையாடுமிடம் மற்றும் துணைக் கட்டடம் முதலியன போன்ற வசதிகளுக்காகவும் போட்டி விளையாட்டுகளுக்கான உள்ளமைப்புகளுக்காகவும் திட்டமிடுதல் அடைதல், கட்டுமானம் நிறுவி பேணுதல்

iii) குழுப் போட்டி விளையாட்டுகள், பயிற்சியளிக்கும் முகாம்கள், விளையாட்டுப் போட்டிக் காட்சிகள் மற்றும் ஏனைய போட்டி விளையாட்டு நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்து வசதிகளை அளித்தல்

iv) போட்டி விளையாட்டுகள் மற்றும் விளையாட்டுக்குரிய நிறுவனங்களை/போட்டி விளையாட்டுக்குரிய கட்டடத் தொகுதிகளை நிறுவி நிருவகித்தல்.

v) போட்டி விளையாட்டுக்களில் சிறப்பாக விளங்குவதற்காக இளைஞர்களுக்கு நிதியுதவியளிக்க வகை செய்தல்; வறிய நிலையிலுள்ள தலைசிறந்து விளங்கும் விளையாட்டு வீரர்களுக்கும் நிதியுதவி வழங்கல்; ஊக்கத் தொகை வழங்குதல்; இத்துறையால் மேற் கொள்ளப்படும் நடவடிக்கைகளான தேசிய/தென்மண்டல/மாநிலங்களுக்கிடையேயான வெற்றி வீரனுக்கான போட்டிகளில் கலந்து கொள்ளும் விளையாட்டுக் கழகங்களுக்கும் பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காகச் சில தனி நபர்களுக்கும் கூட மானியங்களை ஒப்பளித்தல் ஆகிய நடவடிக்கைகள் இத்துறையால் மேற்கொள்ளப் பெறுகின்றன. இவை நீங்கலாக விளையாட்டுப் பள்ளிகள் (ஆண்கள்) மற்றும் ஆண், பெண் இருவருக்குமான விளையாட்டு விடுதிகள் ஆகியன தமிழ்நாடு விளையாட்டுப் ஆணைக்குழுவின் உள்ளீட்டெல்லையின் கீழ் வருகின்றன. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைக்குழுவுக்கு 1996–97 ஆம் ஆண்டில் ரூ. 359.77 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு ஓவிய நுண்கலைக்குழு**

04. "தமிழ்நாடு ஓவிய நுண்கலைக்குழு" 1992 – ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. காட்சி மற்றும் கலைகளின் செயலெல்லையில் நடவடிக்கைகளை மேம்படுத்தவும், புது தில்லியிலுள்ள லலிதகலா அகாதமியுடன் இணைந்து செயல்படவும், நாட்டின் கலாச்சார ஒற்றுமையை அதன் வாயிலாக மேம்படுத்துவதும் இந்நிறுவனத்தின் பணிகளாகும்.

05. கல்வியையும், ஆராய்ச்சியையும் மேம்படுத்துதல், கலை தொடர்பான வெளியீடுகள், கலைஞர்களுக்கும் கலைக் கழகங்களுக்குமிடையே ஒற்றுமையை வளர்த்தல், அமைப்பு நிறுவனங்களுக்கு ஆதரவளித்தல், மாவட்டக் கலை மையங்களை நிறுவுதல், மாநாடுகள், கருத்தரங்கங்கள், கண்காட்சிகள் ஆகியவற்றுக்கு ஏற்பாடு செய்தல், ஓவியம், சிற்பம் மற்றும் கட்டடக் கலைத் துறைகளிலுள்ள தகுதியுடைய கலைஞர்களுக்கு படிப்புதவித் தொகைகளையம் பரிசுகளையும் வழங்குதல், ஆகியன ஓவிய நுண்கலைக்குழுவின் பல்வேறு நடவடிக்கைகளாகும். 1995 – 96 ஆம் ஆண்டில் மாநில அரசும் புது தில்லியிலுள்ள லலித கலைக்கழகமும் இந்நிறுவனத்திற்கு முறையே 5.50 இலட்ச ரூபாய்களையும் 10 இலட்ச ரூபாய்களையும் வழங்கியுள்ளது.

06. மாநிலத் திட்டக் குழுவால் கலை, பண்பாடு மற்றும் போட்டி விளையாட்டுகள் தொடர்பில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் 3 படி நிலை அமைப்புகளிடம் பின்வரும் பொறுப்புகளை ஒப்படைக்கப் பரிந்துரைக்கப்படுகிறது.

## கலைத் தொடர்பான நடிவடிக்கைகள்

### I. ஊராட்சி

| தொ. எண். (1) | நடவடிக்கை (2) | அதிகார ஒப்படைப்பு (3) |
|---|---|---|
| 1. | கலை தொடர்பான நடவடிக்கைகளை மேம்படுத்துதல் | 1) கிராமத்தில் விளையாட்டுக்கள், திருவிழாக்கள் மற்றும் கலை நிகழ்சிகளுக்குஏற்பாடு செய்தல் |
| | | 2) நாட்டுப்புறக் கலைக்குழு, நாடக, நடன குழுக்கள் போன்றவை வாயிலாகக் கல்வி அறிவு, சிறு குடும்ப அளவு, தேசிய ஒருமைப்பாடு ஆகியவற்றை விருத்தி செய்தல். |
| | | 3) அவல நிலையிலுள்ள கலைஞர்களைக் கண்டறிந்து உதவிக்கு ஏற்பாடு செய்தல். |
| | | 4) கிராமப்புறத்தில் விளையாட்டுத் திடலை உருவாக்கி பேணுதலும் விளையாட்டுப் பொருள்களுக்கு வகை செய்தலும். |
| | | 5) கிராம அளவில் கலாச்சார நடவடிக்கைகளையும் போட்டிவிளையாட்டுக்களையும் விருத்தி செய்தல். கிராம நிலையில் விளையாட்டு வளாகங்கள். நாடக சபை மற்றும் பிற கட்டட வளாகங்கள் உள்ளமைப்பு களையும்ஒருங்கிணைப்பு செய்தல். |
| | | 6) கிராமத்தில் கைவினைப் பொருட்கள் அருங்காட்சி யகத்தை நிறுவி அதனைப் பேணுதல். கலைஞர்கள் இசை மேதைகள், நடனக் கலைஞர்கள் இலக்கிய வல்லுநர்கள் பட்டியல் தயாரித்தல் |

## II. ஊராட்சி ஒன்றியம்

| தொ. எண். | நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|
| 1. | கலாச்சார நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தல் | 1) உள்ளூர் கலாச்சார நிறுவனங்கள் மற்றும் சிற்றூராட்சிகளின் உதவியுடன் போட்டி விளையாட்டுகளுக்கும் கலாச்சார விழா சந்திப்புகளுக்கும் திட்டமிட்டு ஏற்பாடு செய்தல்.<br>2) ஊராட்சிகளின் உதவியுடன் உள்ளூர் திருவிழாக்களுக்கு ஏற்பாடு செய்தல்.<br>3) கிராம நிலையில் கலாச்சார நடவடிக்கைகளையும், விளையாட்டுக்களையும் அபிவிருத்தி செய்ய விளையாட்டு வளாகங்கங்கள் நாடக சபைகள் ஏனைய உள்ளமைப்புகள் ஆகியவற்றை நிறுவுதல் |

## III. மாவட்ட ஊராட்சி

| தொ. எண். | நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|
| 1. | காலச்சார நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தல் | 1) சித்திரம் வரைதல், ஓவியம் தீட்டும் போட்டிகள், பயிற்சியளிக்கும் முகாம்கள், கண் காட்சிகள், பந்தயங்கள், குழுப்போட்டி விளையாட்டுகள், இளைஞர்களுக்கான விழாச்சந்தைகள் மற்றும் திருவிழாக்கள், போன்ற நிகழ்ச்சிகள் மற்றும் திட்டங்களை முறையே இயல், இசை, நாடக மன்றம், ஓவிய நுண்கலைக் குழு மற்றும் விளையாட்டுப் மேம்பாட்டு ஆணைக்குழு ஆகியவற்றின் உதவியுடன் மாவட்டங்களில் நிகழ்ச்சி ஏற்பாடு செய்வதற்கு வழிகாட்டல், ஊக்குவித்தல் மற்றும் ஒருங்கிணைப்பு செய்தல்<br>2) தகுதியுடைய தலைசிறந்த கலைஞர்கள்/கைவினைஞர்கள்/கைத்திற விற்பன்னர்கள் மற்றும் விளையாட்டு வீரர்களுக்குச் சிறப்பு செய்து பரிசுகள் வழங்கல், மாவட்டத்தில் உள்ள புகழ் பெற்ற கலைஞர்கள்/பாடகர்கள்/கை வினைஞர்கள் கைத்திற விற்பன்னர்கள் ஆகியோரைப் பற்றிய குறிப்பு பட்டியலொன்றைத் தயாரித்துப் பேணுதல். |

| தொ. எண். | நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|
| | | 3) ஊராட்சிகளில் போட்டி விளையாட்டுகளின் தரத்தை மேம்படுத்துவதற்குத் திட்டமிடுதலும் அதற்கு தேவையான கட்டட உள்ளமைப்புகான வசதிகளைச் செய்து தருதலும். |

நிருவாகச் சிக்கல்கள்

07. மாவட்ட ஊராட்சி/ஊராட்சி ஒன்றியம்/ஊராட்சி நிலையில் கலாச்சார நடவடிக்கைகளைக் கவனிப்பதற்குத் தனியே களப்பணியாளர்கள் கிடையாது. கலை மற்றும் பண்பாட்டை மேம்படுத்துவதற்கும் அரிய கலை வடிவங்களைப் பாதுகாக்கவும் தேர்ச்சித் திறம் பெற்ற கலைஞர்களை ஊக்குவிக்கவும் தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்டக் கலை மன்றங்கள் மட்டுமே அண்மையில் (1996) தோற்றுவிக்கப்பட்டன. மாவட்டாட்சியரும் தமிழ்வளர்ச்சித் துறையின் உதவி இயக்குநரும் முறையே மாவட்டக் கலை மன்றங்களின் தலைவராகவும் உறுப்பினர் செயலராகவும் செயல்படுகின்றனர். இயல், இசை, நாடக மன்றம், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக்குழு மற்றும் சவகர் சிறுவர் இல்லம் ஆகியவற்றின் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதன் மூலம் மாவட்டத்தில் ஒரு மையமாகச் செயல்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதே போன்று, மாவட்ட விளையாட்டு ஆணைக்குழுவும் மாவட்ட தலைமையிடங்களில் குறைந்த அளவுப் பணியாளர்களையேக் கொண்டுள்ளது.

08. மாநிலத் திட்டக்குழு அடிப்படையில் நிருவாகத்திற்குரியதல்லாத அதிகாரங்களை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒப்படைப்பதற்குப் பரிந்துரைக்கிறது. எனவே, கலாச்சார நடவடிக்கைகளைக் கவனிப்பதற்குரிய பல்வேறு துறைகளின் அலுவலக அமைப்பு மற்றும் அலுவலக நடைமுறை அமைப்பில் அதிகக் குழப்பம் இருப்பதற்கில்லை.

நிதிச் சிக்கல்கள்

09. திட்டமிடல், மேற்பார்வை மற்றும் ஊராட்சிகள் கால முறையாக ஏற்பாடு செய்யும்/அமைக்கும் கலாச்சார விழாக்கள்/நடவடிக்கைகள், போட்டி விளையாட்டு நிகழ்வுகள்/சந்திப்புகள் மற்றும் அவற்றை ஒருங்கிணைக்கும் தன்மை முதலியன மாவட்ட ஊராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றியக் குழுக் களுக்கும் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களாகும். இந்நடவடிக்கைகளுக்குத் தேவைப்படும் நிதிகளை, மாவட்ட ஊராட்சி/ ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாநில அளவிலான பிற அரசு துறைகள்/முகமைகள் வாயிலாக மாநில அரசால் ஊராட்சிகளுக்கு ஒதுக்கப் பெறுதல் வேண்டும்.

சட்டச் சிக்கல்கள்

10. ஊராட்சிகளுக்கு மான்யம் வழங்க வகை செய்தல் தவிர பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களுக்கு நிருவாக/ நிதி அதிகாரங்களை மாற்றுவதற்கு/ஒப்படைப்பதற்கு ஏதும் பரிந்துரை இல்லாததால் சட்டச் சிக்கல்கள் எழவில்லை. இருப்பினும், மாவட்டக் கலை மன்றங்கள் மற்றும் மாவட்ட விளையாட்டு ஆணைக்குழு வாயிலாக முறையே கலாச்சார விழாக்களை/விளையாட்டுக்களை நடத்துவதற்குச் ஊராட்சிகளுக்கு மானியம் அளிப்பதற்குக் குறிப்பாக அரசாணை தேவைப்படும். எனவே ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மேற்படி அதிகாரம் ஒப்படைக்கப்பெறும் நேரத்தில் இது குறித்து பரிசீலிக்கலாம்.